

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றத்தின் மாநில அமைப்பின் சார்பில் மாநில பொதுச் செயலாளர் மன்றம் நா.சண்முகநாதன் தலைமையில் நேரில் சந்தித்து வாழ்த்துக்கள் தெரிவித்தனர். அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு ஆகியோர் உடனிருந்தனர். நிகழ்வில் மாநிலத் தலைவர் இரவி மாநில சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் இரவிச்சந்திரன் மற்றும் நிர்வாகிகள் உடனுள்ளனர்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி நகராட்சி பகுதியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.3.02 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பெருந்தலைவர் காமராஜர் காய்கறி நளங்காடி கட்டிடம் திறப்பு விழா நடைபெற்றது. இதில் அமைச்சர்கள் கே.என்.நேரு, ஆவடி சா.மு.நாசர் , முன்னாள் ஒன்றிய அமைச்சர் எஸ்.ஜெகத்ரட்சகன் ஆகியோர் திறந்து வைத்து பார்வையிட்டார்கள் உடன் மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப், பொன்னேரி எம்.எல்.ஏ, துரைசந்திரசேகர் மண்டல பொறியாளர் லெட்சுமி, நகராட்சி மன்ற தலைவர் சரஸ்வதிபூபதி, மாநகராட்சி ஆணையர் கந்தசாமி, மற்றும் திருத்தணி எம்.பூபதி, வி.வினோத்குமார், ஆ.சாமிராஜ், உள்பட அரசுத் துறை அதிகாரிகள் நகர் மன்ற உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



பூந்தமல்லி குன்றத்தூர் குன்றத்தூர் பல்லாவரம் சாலையை (SH113A), அகலப்படுத்துவதற்கான பணிகளை நேற்று (30.04.2025) அமைச்சர்கள் எ.வ.வேலு, தா.மோ.அன்பரசன் ஆகியோர் களஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வின் போது, சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி, நெடுஞ்சாலைத் துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகின் தலைமைப் பொறியாளர் கு.கோ.சத்தியபிரகாஷ், சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) இரா.சந்திரசேகர், கோட்டப் பொறியாளர் எஸ்.செல்வக்குமார் மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



மேட்டுப்பாளையம், டி.கே.வி. மஹாலில் நடைபெற்ற கழக உயர்நிலை செயல்திட்டகுழு உறுப்பினர் பா.மு.முபாரக் அவர்களின் இல்ல மணவிழா நிகழ்ச்சியில், கழக துணை பொதுசெயலாளர் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா, அமைச்சர் மு.பெ.சாமிநாதன், சுற்றுலாத்துறை அமைச்சர் மாண்புமிகு இரா.ராஜேந்திரன், அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன், சட்டத்துறை இணை செயலாளர் இ.பரந்தாமன் எம்.எல்.ஏ.., நீலகிரி மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜ்6, கோவை மாவட்ட கழக செயலாளர்கள் நா.கார்த்திக்(மாநகர்) தொ.அ.ரவி(வடக்கு) ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கோல்டு டி. பிரகாஷ் தலைமை! ப.குணாளன் – என்.சந்திரன் எம்.சி. – பிரபு கஜேந்திரன் பங்கேற்பு!

# காஞ்சிபுரம் வடக்கு இளைஞரணி சார்பில் மாபெரும் கிரிக்கெட் போட்டி!

### அமைச்சர் தா.மோ. அன்பரசன் – டி.ஆர். பாலு எம்.பி. – ஆர்.எஸ். பாரதி தொடங்கி வைக்கின்றனர்!

சென்னை, மே.1

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் திமுக இளைஞரணி சார்பில் முதல்வர் மு க ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் கிரிக்கெட் போட்டி (3.05.2026 சனிக்கிழமை) காலை 6 மணிக்கு ஏ.ஜே.எஸ். நிதி பள்ளி ஆலந்தூரில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி. பிரகாஷ் தலைமையில் நடைபெறுகிறது.

இம்மாபெரும் போட்டியை மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன், டி ஆர் பாலு எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி ஆகியோர் தொடங்கி வைக்கின்றனர்.

இப்போட்டியில் (வார்டு 160,161,162 ) ஆலந்தூரை சேர்ந்த 20 அணிகள் பங்கேற்கின்றனர்.

இப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசு ரூ. 20,000 , இரண்டாம் பரிசு 10,000, மூன்றாம் பரிசு 5,000 வழங்கப்படுகிறது.

இதில் பகுதிச் செயலாளர்கள் ப. குணாளன், என். சந்திரன் எம்.சி., மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், எம் எஸ் கே இப்ராஹிம், ஆர் டி பூபாலன், கீதா ஆனந்தன், இரா. பாஸ்கரன், எஸ். சதீஷ், வட்ட செயலாளர்கள் சீனிவாசன், முரள கிருஷ்ணன், செல்வேந்திரன், ரவி ,கருணாநிதி, கிருஷ்ணமூர்த்தி ,சரவணன் ,வேலவன் , ஏசுதாஸ் ,ஜெகதீஸ்வரன், உலகநாதன், நடராஜ் மற்றும் சாய் ஜெய காந்த் பாரதி, பேராசிரியர் பிரபு, ஆர் ஆர் ஜெயராம் மார்த்தாண்டன், கே ஆர் ஆனந்தன், வே டில்லி பாபு, கோ. கோடீஸ்வரன், ஐ. அழகேசன், ஜெயசெல்வம், எம். சையத் அபுதாஹிர், மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அனைவரும் பங்கேற்கின்றனர்.

நிகழ்ச்சிக்கு வருகை தரும் அனைவரையும் கலாநிதி குணாளன், இ.கார்த்திக், ஆ.தீபக், ஏ.உதயகுமார், எஸ். வாசிம் ராஜா, ஏ.திலீப்,

கோ.பிரவீன்குமார் , சொ.சஞ்சீவி, ப.ராஜேஷ், சே.விக்கி, அ.ஜாகீர்உசேன், ப.சந்தோஷ், உவிக்னேஷ், உசந்திரசேகர், கே.விஜாபு, உ.அஜித், பாலச்சந்தர், எஸ். கதிரவன், ப.சீனிவாசன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இறுதியில் தீனதயாளன் நன்றி கூறுகிறார்.

### மண்டலம் 4,5,6,8,9 ஆகிய பகுதிகளில் மெட்ரோ ரயில் பணிக்காக

# குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம்!

### சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை,மே.1-

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் (CMRL) அண்ணா நகர் மண்டலம், கெல்லிஸ் பால்ஃபோர் சாலையில் பிரதான குடிநீர் குழாய் இணைப்பு பணிகள் மேற்கொள்வதால் 03.05.2025 அன்று காலை 08.00 மணி முதல் 04.05.2025 அன்று இரவு 08.00 மணி வரை (36 மணி நேரம்) கீழ்ப்பாக்கம் (TM1 & TM3 ) குடிநீர் பகிர்மான நிலையத்தின் செயல்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தம் செய்யப்படும். ஆகையால் மண்டலம்-4 (தண்டையார்பேட்டை), மண்டலம்-5 (இராயபுரம்), மண்டலம்-6 (திரு.வி.க நகர்), மண்டலம்-8 (அண்ணா நகர்) மற்றும் மண்டலம்-9 (தேனாம்பேட்டை) -க்குட்பட்ட கீழ்கண்ட சில பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

மண்டலம் பகுதிகள் வருமாறு:

மண்டலம்-4 (தண்டையார்பேட்டை) தண்டையார்பேட்டை மண்டலம்-5 (இராயபுரம்) புரசைவாக்கம், பெரியமேடு, சௌகார்பேட்டை, எழும்பூர், சிந்தாதிரிபேட்டை மண்டலம்-6 (திரு.வி.க நகர்) ஓட்டேரி, அயனாவரம் , பெரம்பூர், செம்பியம் மண்டலம்- 8 (அண்ணா நகர்) கீழ்ப்பாக்கம், வில்லிவாக்கம், கெல்லிஸ் மண்டலம்- 9 ( தேனாம்பேட்டை ) திருவல்லிக்கேணி

எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (Dial for Water) குடிநீர் பெற்றுக்கொள்ள வாரியத்தின் https://cmwssb.tn.gov.in என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம்போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும்.



ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குன்றத்தூர் வடக்கு ஒன்றிய தி.மு.க சார்பில் மௌலிவாக்கம் ஊராட்சியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தண்ணீர் பந்தலை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்து, பொதுமக்களுக்கு பழங்கள், பழரசங்கள், இளநீர், மோர் ஆகியவற்றை வழங்கினார். அருகில் குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஒன்றியக்குழு துணை தலைவர் உமா மகேஸ்வரி வந்தேமாதரம், தி.க.பாஸ்கரன், ஊராட்சி மன்றத் தலைவர் திவ்யா சத்தியநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### அடையாறு முத்தமிழ்ப் பேரவையில் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாளையொட்டி

# ‘தமிழ்வெல்லும்’ கலைப் போட்டிக்கான பதாகைகள் வெளியீடு!

### அமைச்சர்கள் தங்கம் தென்னரசு – மு.பெ.சாமிநாதன் பதக்கங்கள் வழங்கினர் !

சென்னை. மே.1-

நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களும், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர்மு.பெ.சாமிநாதன் அவர்களும் நேற்று முன்தினம் (29.04.2025) அடையாறு முத்தமிழ்ப் பேரவையில் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாளையொட்டி நடைபெற்ற தமிழ்வாரம் நிகழ்ச்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ஊடக மையம் சார்பில், “தமிழ் வெல்லும்” என்ற தலைப்பில் நடத்தப்படவுள்ள கலைப்போட்டிக்கான அறிவிப்பு பதாகைகளை வெளியிட்டார்கள். இதனைத் தொடர்ந்து செய்தி மக்கள் தொடர்புத் துறையின் ஊடக மையம் சார்பில் மகளிர் தினத்தை முன்னிட்டு “செந்தமிழ்நாட்டு தமிழச்சியே”என்ற தலைப்பில் நடத்தப்பட்ட போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிபெற்ற 36 நபர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்கி சிறப்பித்தார்கள்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், கடந்த 4 ஆண்டுகால ஆட்சியில், பெண்கள் சுயமாக நிற்கவும், தனித்துவமாக செயல்படவும் பல்வேறு சீர்மிகு திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக விடியல் பயணத்திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம் போன்ற திட்டங்ககளால் பெண்கள் பெருமளவில் பயன் பெற்று வருகின்றனர். மேலும், மார்ச்8 ந்தேதியான மகளிர் தினத்தை கொண்டாடும் நோக்கில் தமிழ்நாடு அரசின் பெண்கள் நலத் திட்டங்களையும், பெண்கள் நலச் செயல்பாட்டினை அறியும் விதமாகச் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ஊடக மையம் வாயிலாக செந்தமிழ் நாட்டு தமிழச்சியே என்ற தலைப்பில் பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் பங்குபெறும் வகையில் பல்வேறு சமூக ஊடகங்களில் [எக்ஸ்(X) தளம், படவரி(Instagram), முகநூல்(Facebook), புலனம்(WhatsApp), வலையொளி(YouTube)] வாயிலாகப் போட்டிகள் நடத்தப்பட்டன.

செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ஊடக மையம் வாயிலாக, இது வரை நடத்தப்பட்ட போட்டிகளில், தமிழ்நாடு அரசின் முதன்மையான திட்டங்கள் குறித்த ரீல்ஸ் போட்டி, போதையில்லா தமிழ்நாடு போட்டிகள், திருக்குறள்போட்டிகள், பொங்கல் உழவும் மரபும் கலைப் போட்டிகள், லவ் டிஎன் (LOVE TN) போட்டிகள் என 5 போட்டிகள் நடத்தப்பட்டன.

இப்போட்டிகளில் 35,737 நபர்கள் மின்னஞ்சல் மூலம் தங்களது படைப்புகளை அனுப்பி கலந்து கொண்டனர். அதில் 171 நபர்கள் வெற்றி பெற்றவர்களாகத் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களால் பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பதங்கங்கள் வழங்கப்பட்டன.

பல்வேறு பெண்கள் நலத்திட்டங்களின் மீதான கருத்துக்களை அறியவும், பெண்களின் ஆளுமையைப் போற்றும் விதமாகவும் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ஊடக மையம் சார்பில் “செந்தமிழ் நாட்டு தமிழச்சியே” என்ற தலைப்பில், உங்கள் கருத்து மதிப்புமிக்கது (Your Voice Matters), சுயமிப் போட்டி(Selfie with the Superwoman), ரீல்ஸ் போட்டி (Reels Competition), கட்டுரைப் போட்டி(Essay Competition), வரைதல்/ஓவியப்போட்டி (Painting/ Drawing Competition) என 5 போட்டிகள் நடத்தப்பட்டன.

போட்டியாளர்கள் மின்னஞ்சல் மற்றும் விரைவு துலங்கள் குறியீடு(QR CODE) வாயிலாகப் படைப்புகளை அனுப்பி கலந்து கொண்டனர். அதில் உங்கள் கருத்து மதிப்புமிக்கது போட்டியில் (Your Voice Matters) 909 நபர்களும், சுயமிப்போட்டியில் (Selfie with the Superwoman) 576 நபர்களும், ரீல்ஸ் போட்டியில்(Reels Competition) 452 நபர்ளும், கட்டுரைப் போட்டியில்(Essay Competition) 907 நபர்களும், வரைதல்/ஓவியப்போட்டி (Painting/ Drawing Competition) 898 நபர்களும் என இந்த 5 போட்டிகளிலும் 3,742 நபர்கள் கலந்து கொண்டனர். இதில் 36 நபர்கள் வெற்றி பெற்றவர்களாகத் தேர்வு செய்யப்பட்டனர். இந்த வெற்றியாளர்கள் குறித்த விவரம் 25042025 அன்று TNDIPR சமூக வலைதள கணக்குகளில் வெளியிடப்பட்டது.

நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களும், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்களும் 29.04.2025 அன்று அடையாறு முத்தமிழ்ப் பேரவையில் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாளையொட்டி நடைபெற்ற தமிழ்வாரம் நிகழ்ச்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ஊடக மையம் சார்பில், “தமிழ் வெல்லும்” என்ற தலைப்பில் நடத்தப்படவுள்ள கலைப்போட்டிக்கான அறிவிப்பு பதாகைகளை வெளியிட்டார்கள். இதனைத் தொடர்ந்து செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ஊடக மையம் சார்பில் மகளிர் தினத்தை முன்னிட்டு “செந்தமிழ்நாட்டு தமிழச்சியே”என்ற தலைப்பில் நடத்தப்பட்ட போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிபெற்ற 36 நபர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்கி சிறப்பித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு.வே.ராஜாராம், இ.ஆ.ப, தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள், தமிழ் வளர்ச்சித்துறை அலுவலர்கள், செய்தி மக்கள் தொடர்புத்துறை அலுவலர்கள் மற்றும் ஊடக மைய அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

